# ஊட்டச்சத்து மிகுந்த இயற்கை இடு பொருள் தயாரித்தல்



ந. அருள்மணி
தோட்டக்கலை உதவி இயக்குநர்
&
உழவன் நண்பன் WhatsApp குழு
8056185081

# பஞ்சகாவ்யா

✓ புதிய மாட்டுச்சாணம் - 5 கிலோ
✓ நெய் - 1 கிலோ

நன்றாக காலை மற்றும் மாலை நேரங்களில் கலக்கி 4 நாட்கள் வரை வைக்கவும்.

- பசு கோமியம் – 3 லிட்டர்
- பால் – 2 லிட்டர்
- தயிர் – **2 லிட்டர்**

- பாத்திரத்தை முழுமையாக காற்றுப்புகாதபடி மூடாமல், துணி/தளர்வான மூடியால் மூடி வைக்கவும்.
- நிழலான இடத்தில் வைக்கவும்.
- தினமும் காலை மற்றும் மாலை **ஒரு முறை நன்றாகக் கலக்கவும்**.
- பொதுவாக **21 நாட்கள்** நொதித்த பிறகு பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| அமில நிலை | 5.45 |
| ஈ.சி டி எஸ்.எம்2 | 10.22 |
| மொத்த தழைச்சத்து (பிபிஎம்) | 229 |
| மொத்த மணிச்சத்து (பிபிஎம்) | 209 |
| மொத்த சாம்பல்சத்து (பிபிஎம்) | 232 |
| சோடியம் | 90 |
| சுண்ணாம்புச்சத்து | 25 |
| ஐ.ஏ.ஏ.(பி.பி.எம்.) | 8.5 |
| ஜி.ஏ.(பி.பி.எம்.) | 3.5 |

| | |
|---|---|
| பூசணம் | 38800 மி.லி |
| பாக்டீரியா | 1880000 மி.லி. |
| லேக்டோபேசில்லஸ் | 2260000/மி.லி. |
| மொத்த காற்றில்லாச் சுவாச உயிரி | 10000/மி.லி. |
| அமிலம் | 360/மி.லி. |

# தசகாவ்யா

- வேம்பு(அசாடிரக்ட்டா இன்டிகா)
- எருக்கம் (கேலோடிராபிஸ்)
- கொலின்ஜி (டெப்ரோசியா பர்ப்யூரியா)
- நொச்சி (விட்டெக்ஸ் நெகுண்டோ)
- உமதை (டட்டுரா மிட்டல்)
- காட்டாமணக்கு (ஜட்ரோபா கர்கஸ்)
- அடத்தோடா (அடத்தோடா வேசிகா)
- புங்கம் (பொங்கேமியா பின்னட்டா)

## தெளித்தால்- 3%

1:1 விகிதத்தில் (1கிலோ நறுக்கிய இலைகள் - 1 லிட்டர் மாட்டு நீரில்) தழைகளை முக்கி 10 நாட்களுக்கு முக்கி வைக்கவும்.

வடிகட்டிய அனைத்து வகையான தாவர சாறை ஒவ்வொரு 5 லிட்டர் பஞ்சகாவ்யா கரைசலில் 1 லிட்டர் என்ற அளவில் சேர்க்கவும். இந்தக் கரைசலை 25 நாட்களுக்கு வைத்து நன்றாகக் குலுக்கவும்.

அந்த நேரத்தில் பஞ்சகாவ்யா மற்றும் தாவர வடிசாறை நன்றாகக் கலக்கவும்.

# ஜீவாமிர்தம்

**நோக்கம்**: மண்ணில் நுண்ணுயிர் செயல்பாட்டை ஊக்குவிக்கும்

**தேவையான பொருட்கள் :**

- புதிய மாட்டுச்சாணம் – 10 கிலோ
- பழைய மாட்டுக் கோமியம் – 10 லிட்டர்
- நாட்டுவெல்லம் – 3 கிலோ
- கடலை/துவரை/பாசிப்பயறு/தட்டைப்பயறு/உளுந்து மாவு – 2 கிலோ
- உயிருள்ள வளமான மண் – 1 கிலோ
- தண்ணீர் – 200 லிட்டர்



# தயாரிக்கும் முறை

காப்புக்காடுகளில் மண் சேகரித்தல்

200 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் ட்ரம்

10 கிலோ மாட்டுச்சாணம் சேர்க்கவும்.

10 லிட்டர் கோமியம் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

2 கிலோ பழைய வெல்லத்தைச் சேர்க்கவும்.

3 கிலோ பருப்பு மாவைச் சேர்க்கவும்.

வளமான வயல் மண்ணைச் சேர்க்கலாம்.

மரக்குச்சியால் நன்றாகக் கலக்கவும்.

2–7 **நாட்கள்** நொதிக்க விடவும்.

அதிகபட்சமாக மூன்று நாட்களில் பயன்படுத்திடவும்

# கன ஜீவாமிர்தம்

- நாட்டு பசும் சாணம்-100 கிலோ

⬇

- நாட்டு மாட்டு கோமியம் -15 லிட்டர்

⬇

- வெல்லம்-2 கிலோ

⬇

- ஏதேனும் பயறு வகை மாவு – 2 கிலோ

⬇

- ஒரு பத்திரத்தில் நட்டு பசும் கோமியம் , பயறுவகை மாவு , வெள்ளம் ஆகியவற்றை நன்றாகக் கரைத்து கொள்ளவும்.

100 கிலோ பசும் சாணத்தை மர நிழலில் பரப்பி கரைத்து வைத்துள்ள கரைசலை அதன் மேல் சமமாக தெளிக்கவும்.

⬇ 48 மணி நேரம் காத்திருக்கவும்

கன ஜீவமிர்த்த படுக்கையை சுற்றி ½ அடி விட்டு சமையலுக்கு பயன் படும் மிளகாய் பொடியை சிறிது துவி விடவும்.

⬇

லேசாக உலர்ந்தவுடன் உருண்டையாக்கி சேமிக்கவும். இந்த சேமிப்பு கலவையை பயன்படுத்தும்போது இலேசாக மாட்டுச் கோமியம் அதன் மீது தெளித்து, புட்டு மாவு பதத்தில் பயன்படுத்தலாம்.

**ஒரு வருடம் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம்**

# புண்ணாக்குக் கரைசல்

- ✓100 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பிளாஸ்டிக் ட்ரம்
- ✓கடலைப் புண்ணாக்கு - 5 கிலோ
- ✓தேங்காய்ப் புண்ணாக்கு - 3 கிலோ
- ✓எள்ளுப் புண்ணாக்கு - 2 கிலோ
- ✓வெல்லம் அல்லது நாட்டுச் சர்க்கரை - 3 கிலோ
- ✓நன்கு புளித்த தயிர் - 3 லிட்டர்
- ✓சுத்தமான தண்ணீர் - 40 லிட்டர்

நொதிப்பு காலம் - 15-20 நாட்கள்

பயன்படுத்தும் காலம் - 90 நாட்கள்



# மீன் அமிலம்

- 5 kg மீன்
- 5 kg வெல்லம்

வெல்லத்தை சிறிது பொடியாக்கி மீனுடன் நன்றாகக் கலக்கவும். சுமார் 40 **நாட்கள்** நொதித்த பிறகு திரவம் தயாராகும்.

✓ முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை ஊட்டச்சத்துக்கள்

✓ நுண்ணூட்டங்கள்

✓ 12 வகையான நன்மை செய்யும் அமினோ அமினங்கள்

✓ வளர்ச்சி ஊக்கிகள்

# அமிர்த கரைசல்




- ✓புதிய நாட்டு மாட்டு சாணம் – 1 கிலோ
- ✓பழைய மாட்டு கோமியம் 1 லிட்டர்
- ✓நாட்டு சக்கரை - 50 கிராம்
- ✓தண்ணீர் - 10 லிட்டர்

- தரைவழி பாசனத்திற்கு அப்படியே பயன்படுத்தலாம்
- இலையில் தெளிப்பதற்கு 1:10 விகிதம்

24 மணி நேரத்தில் பயன்படுத்த வேண்டும்



# உயிர் கரைசல்

- புதிய நாட்டு மாட்டு சாணம் – 10 கிலோ
- பழைய மாட்டு கோமியம் – 10 லிட்டர்
- முட்டை - 3 எண்கள்
- மாட்டு கோமியத்தில் முட்டையை உடைத்து ஊற்றி ஓட்டை சிறு துண்டுகளாக்கி இடவும்.
- பின்பு சிறிது சிறிதாக சாணத்தை கலக்கவும்.
- தினசரி ஒரு முறை கலக்கிவிட்டு ஒரு வாரம் கழித்து பயன்படுத்தலாம்.

பயன்பாடு- 95 லிட்டர் தண்ணீருடன் 5 லிட்டர் உயிர் கரைசல் கரைந்து இலை வழியாக தெளிக்கலாம்.ஏக்கருக்கு 30 லிட்டர் உயிர் கரைசலை தரை வழியாக கொடுக்கலாம்

# தேமோர் கரைசல்

- நன்கு புளித்த வெண்ணெய் எடுத்த மோர் - 5 லிட்டர்
- தேங்காய் - 10 எண்கள்
- தேங்காயை துருவி அதனுடன் தேவையான அளவு நீர் சேர்த்து 5 லிட்டர் தேங்காய் பால் தயார் செய்யவும்.
- இத்துடன் மோரை கலக்கவும்.
- இந்தக் கலவையை பிளாஸ்டிக் ட்ரம் அல்லது மண் தொட்டியில் ஒரு வாரம் வைத்திருந்தால் தேமோர் கரைசல் தயார்.

- தெளிப்புக்கு ஒரு லிட்டருக்கு 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும். அதிகபட்சமாக ஒரு வார காலம் வைத்திருந்து பயன்படுத்தலாம்

# அரப்பு மோர் கரைசல்

இரண்டு கிலோ அரப்பு இலையை தேவையான அளவு நீருடன் கலந்து அரைத்து 5 லிட்டராக மாற்றவும்.

↓

இதனை 5 லிட்டர் புளித்த மோருடன் கலந்து ஒரு வாரம் வைத்திருந்தால் அரப்பு மோர் கரைசல் தயார்.

↓

- ✓ பூச்சி விரட்டியாகவும் செயல்படும்.
- ✓ பூ மற்றும் காய் பூத்தலை மேம்படுத்தும்.

# EM கரைசல்

## தாய் திரவம் தயாரித்தல்

**தேவையான பொருட்கள்:**

1. வாழை பழம் - 5 கிலோ (நன்கு கனிந்த தோல் நீக்கிய)
2. பப்பாளி பழம் - 5 கிலோ (நன்கு கனிந்த தோல் மற்றும் விதை நீக்கிய)
3. பரங்கி பழம் - 5 கிலோ (நன்கு கனிந்த தோல் மற்றும் விதை நீக்கிய)
4. 100 லிட்டர் ட்ரம்
5. 50 லிட்டர் தண்ணீர்
6. நாட்டு சக்கரை 5 கிலோ
7. கடலை மாவு ஒரு கிலோ செய்முறை

அனைத்து பொருட்களையும் சேர்த்து 50 லிட்டர் தண்ணீரில் கலந்து மூடி வைக்கவும்.

↓

மூன்று நாட்களுக்கு பிறகு மூடியை திறந்து கடிகார திசையில் நன்கு கலக்கி விட்டு மீண்டும் மூடவும்.

↓

20 நாட்கள் கழித்து தாய் திரவம் தயார்.

ஆயுட்காலம் - 6 மாதம்

# இரண்டாம் நிலை EM கரைசல் தயாரித்தல்

- மூன்று லிட்டர் தாய் திரவத்துடன் 47 லிட்டர் தண்ணீர்
- மற்றும் ஐந்து கிலோ நாட்டு சக்கரை கலந்து 20 நாட்கள் நொதிக்க விடவும்.

- இலை வழியாக தெளிப்பதற்கு - 10 லிட்டருக்கு 1 லிட்டர் தரைவழி பாசனத்திற்கு - ஏக்கருக்கு 10 லிட்டர்

# எருக்கு கரைசல்

- 200 லிட்டர் டிரம்
- 180 லிட்டர் தண்ணீர்
- எருக்கஞ்செடிகள் (போதிய அளவு)

- இலை, பூ, காய்களோடு சேகரித்து இதில் சிறிது சிறிதாக உடைத்துக்கொள்ளலாம். அதனோடு இலை, பூ, காய்களோடு சேர்த்து 180 லிட்டர் தண்ணீர் நிரப்பப்பட்ட டிரம்மில் போட்டு 7 நாட்கள் ஊற விடவும்.

- இலைவழியாக தெளிக்க எருக்கு கரைசல் 5 லிட்டர் + தண்ணீர் 5 லிட்டர்

# முட்டை எலுமிச்சை ரசம்

ஒரு அகன்ற பாத்திரத்தில் தேவையான எண்ணிக்கையில் முட்டைகளை வைத்து மூழ்கும் வரை எலுமிச்சை சாற்றை ஊற்றவும்.

250 கிராம் நாட்டு சக்கரை காற்று புகாமல் 15 நாட்களுக்கு மூடி வைக்கவும்.

அடுத்து 15 நாட்களுக்கு தினசரி காலை மாலை நன்கு குளிக்க விடவும்.

முப்பதாவது நாள் கரைசல் தயார்

10 லிட்டர் தண்ணீருக்கு 20 முதல் 25 மில்லி பயன்படுத்தலாம்.

- பொட்டாசியம் கரைசல்
- வெங்காயம் பூண்டு கரைசல்
- சாண கரைசல்
- சாணபாசி கரைசல்
- பயோ டைஜஸ்டர்
- மாம்பழ கூழ் கரைசல்
- பனம்பழ கரைசல்



# நன்றி


ந. அருள்மணி
தோட்டக்கலை உதவி இயக்குநர்
&
உழவன் நண்பன் WhatsApp குழு
8056185081